## கல்வி அமைச்சு

# நாடளாவிய ரீதியில் தேசிய பாடசாலைகளில் வெற்றிடங்களாகியுள்ள இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் I அதிபர் பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புதல் - 2024

இத்தடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தேசிய பாடசாலைகளில் வெற்றிடமாக உள்ள அதிபர் பதவிகளை நிரப்புவதற்கு பொருத்தமான அலுவலர்களை தெரிவு செய்வதற்காக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்வி சேவை குழுவினால் பணிக்கப்பட்டவாறு இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் I இன் தகுதியான அலுவலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. தகைமைகள்**

i. இலங்கை கல்வி நிர்வாக சேவையில் தரம் I அலுவலராக இருத்தல்.

குறிப்பு 1: விண்ணப்பம் கோரும் இறுதி திகதிக்கு முன்னர் இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் I க்கு பதவி உயர்வு பெற தகுதி பெற்ற அலுவலர்களும் இந்த வெற்றிடங்களுக்கு விண்ணப்பிக்கலாம், என்பதோடு பதவி உயர்வுக்கான தகுதிகளை பூர்த்தி செய்யாத அலுவலர்களால் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். (எவ்வாறயினும் தரம் 1க்கான பதவி உயர்வு கடிதம் நேர்காணலின் போது கட்டாயம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.)

ii அரசாங்க சேவை ஆணைக்குழு அல்லது கல்விச் சேவைக் குழுவினால் தேசிய பாடசாலை அதிபர்களாக நியமிக்கத் தகுதியற்றவர்கள் என அறிவிக்கப்பட்டுள்ள அலுவலர்கள் விண்ணப்பிக்க முடியாது.

ii விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்வதற்கான கடைசி திகதியின்படி விண்ணப்பதாரர்கள் 58 வயதுக்கு மிகாமல் இருக்க வேண்டும்.
(தற்போது யாதும் தேசிய பாடசாலை ஒன்றில் அதிபர் பதவியின் சேவை பார்க்கும்/கடமை நிறைவேற்றும்/கடமை தழுவுவதற்கு முறையாக நியமிக்கப்பட்ட அலுவலர்களுக்கு இந்த வயது எல்லை பொருந்தாது.)

**02. நிபந்தனைகள்**

**i. இம்முறை வெற்றிடங்களை நிரப்பும் போது அந்தந்த அதிபர் பதவிகளுக்கு நியமிக்கப்படும் அலுவலர்கள் குறைந்தபட்சம் 3 ஆண்டுகள் அந்தப் பதவியில் பணியாற்ற வேண்டும்.**

**ii அதிபர் பதவிக்கு நியமிக்கப்பட்டால், ஏற்றுக்கொள்ளக்கூடிய நியாயமான காரணமின்றி அந்த பதவியின் கடமைகளை ஏற்க மறுக்க முடியாது.**

**03. விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டிய முறை**

i. விண்ணப்பதாரர்களால் இத்துடன் காட்டப்பட்டுள்ள மாதிரி வடிவத்தின்படி A4 அளவு தாளில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை முறையாகப் பூர்த்தி செய்து, பதிவுத் தபாலில் மட்டுமே பின்வரும் முகவரிக்கு 2024.03.28 திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் அனுப்ப வேண்டும். விண்ணப்பப் படிவம் அடங்கிய உறையின் மேல் இடது மூலையில், "தேசியப் பாடசாலை அதிபர் பதவி - இலங்கை கல்வி நிர்வாக சேவை – I" என்று குறிப்பிட வேண்டும். தாமதமான விண்ணப்பங்கள் மற்றும் முழுமையடையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்பதோடு விண்ணப்பங்கள் "உதவிச் செயலாளர், கல்விச் சேவைகள் கிளை, கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்ல" என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

ii தங்களின் சமீபத்திய 2x21/2 அங்குல வண்ணப் புகைப்படம் விண்ணப்பப் படிவத்தின் மேல் வலது மூலையில் ஒட்டப்பட்டிருக்க வேண்டும்.

ii மேலும், புள்ளி ஒழுங்கு நடைமுறையின் 2.1, 2.2 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பாடசாலை முகாமைத்துவம் தொடர்பான சேவை அனுபவத்தை நிரூபிக்க நியமன / இடமாறுதல் கடிதங்கள் சமர்ப்பிக்கப்படுமாயின் அந்த கடிதங்களுடன், விண்ணப்பதாரர் பாடசாலை வகைப்பாட்டிற்கு (1AB,1C,2,3) ஏற்ப அந்த வகைப்பாட்டைச் சேர்ந்த பாடசாலையில் தொடர்புடைய காலத்தில் பணிபுரிந்துள்ளார் என்பதற்கு சம்பந்தப்பட்ட நியமனம் / இடமாற்றக் கடிதங்கள் கையொப்பமிடப்பட்டுள்ளது அரசாங்க சேவை ஆணைக்குழுவின் / மாகாண சபைகளின் கௌரவ ஆளுநர்களின் அதிகாரம் வழங்கப்பட்டமைக்கேற்ப உரிய நியமன அதிகாரியால் என்பதை மேலதிக செயலாளர் (கல்வி சேவைகள்) / மாகாணக் கல்விப் பணிப்பாளரிடமிருந்து எழுத்துப்பூர்வ உறுதிப்படுத்தல் கடிதம், விண்ணப்பத்துடன் அல்லது நேர்காணலின் போது கட்டாயமாக சமர்ப்பிக்க வேண்டும். மேலும், புள்ளி ஒழுங்கு நடைமுறையின் 2.3 இன் கீழ், பாடசாலை மேற்பார்வைப் பணியை மேற்கொள்ளும் அலுவலராக பாடசாலை மேற்பார்வை சேவை அனுபவத்தை நிரூபிக்க, தொடர்புடைய நியமனக் கடிதங்கள் / இடமாற்றக் கடிதங்கள் சமர்ப்பிக்கப்பட்டால், உரிய அலுவலர் பாடசாலை மேற்பார்வை பணியில் ஈடுபட்டிருந்ததாக சம்பந்தப்பட்ட மாகாண அதிகாரிகள் / கல்வி அமைச்சின் சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு பொறுப்பான மேலதிக் செயலாளர் எழுத்துப்பூர்வமாக உறுதிப்படுத்தியிருக்க வேண்டும்.

iv. புள்ளி வழங்கும் நடைமுறையில் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகளுக்குரிய அனைத்து சமர்ப்பிக்கப்படும் தகுதிகளும் விண்ணப்பம் கோரும் இறுதித் தேதி அல்லது அதற்கு முன் பூர்த்தி செய்யப்படடடிருக்க வேண்டும் என்பதோடு அந்த திகதிக்குப் பிறகு ஈட்டிக்கொண்ட தகுதிகள் அல்லது சான்றிதழ்களுக்கு புள்ளிகள் வழங்கப்படாது. மேலும் நேர்காணல் தேதிக்குப் பிறகு சமர்ப்பிக்கப்பட்ட கடிதம் அல்லது சேவைச் சான்றிதழ் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

**04. முறைமை**

i. பாடசாலை அடிப்படையில் அதிபர்களாக அலவலர்கள் தெரிவு செய்யப்படமாட்டார்கள் என்பதோடு வெற்றிடங்கள் காணப்படும் பாடசாலைகளின் எண்ணிக்கைக்கு சமமான அலுவலர்கள் அதிபர்களாக தெரிவு செய்யப்படுவார்கள்.

எவ்வாறாயினும், விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்களை அனுப்பும் போது அவர்களின் விருப்பத்திற்கேற்ப பாடசாலைகளை பெயரிட முடியும், என்பதோடு அதிபர் பதவிக்கு நியமிக்கும் போது அந்த முன்னுரிமையும் கவனத்தில் கொள்ளப்படும்.

**குறிப்பு 2:** நேர்முக பரீட்சையில் காட்டப்படும் தகுதியின் அடிப்படையில் எந்தப் பாடசாலைக்கும் தகுதி பெறாத அலுவலர்கள், வெற்றிடப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள அதிபர்கள் தேர்ந்தெடுக்கப்படாத பிற பாடசாலைகளுக்கு நியமனம் செய்ய பரிசீலிக்கப்படுவார்கள்.

ii அதன்படி, அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட இத்துடன் காட்டப்பட்டுள்ள புள்ளி ஒழுங்கு நடைமுறையின்படி, மேற்படி குழுவால் நியமிக்கப்பட்ட நேர்காணல் குழு வழங்கிய புள்ளிகள் விண்ணப்பதாரரின் விருப்பம், சேவைத் தேவை, விண்ணப்பதாரருக்கு எதிரான முந்தைய/தற்போதுள்ள ஒழுக்காற்று நடவடிக்கைகள் பாடசாலையின் கலாச்சார பின்னணி/மரபுகள், கற்றல் மொழிமூலம், பாடசாலை வகை (ஆண்கள்/பெண்கள்/கலவன்) மற்றும் கருத்தில் கொள்ள வேண்டிய பிற காரணிகள் ஆகியவற்றை கருத்தில் கொண்டு, கல்விச் செயலாளரால் வழங்கப்படும் பரிந்துரைகளின் அடிப்படையில் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைக் குழுவினால் அதிபர் பதவிகளுக்கு நியமிக்கப்படுவார்கள்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைக் குழுவின் கட்டளையின் பிரகாரம்,

**வசந்தா பெரேரா**
**செயலாளர்**
**கல்வி அமைச்சு**
2024.03. 20